
# கிறிஸ்துவின் வசனம்

# Word Of Christ




ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

★ அக்டோபர் மாத வேத அறிவுப்போட்டியின் விடைகள்

1. நாகமான் II இரா. 5:17
2. ஏசாவை எபி. 12:16
3. மேன்மைபாராட்டக் யாக் 1:10
4 பவுல் கலா 4:19
5. சம்மதியாதே நீதி 1:10
6. ஆம்
7. அருமையானது
8. அதினின்று
9. பவுல், தீமோத்தேயுவுக்கு
10. தாமதமாயும்

★ அக்டோபர் மாத வேத அறிவுபோட்டியில் வெற்றி பெற்றவர்கள் வெளிவராத காரணம்

தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இன்னும் அநேகரிடத்திலிருந்து விடைகள் இதுவரை வந்து சேரவில்லை ஆகையால் டிசம்பர் இதழில் தாமதமாக வரும் கடிதங்களை சரிபார்த்து வெளியிடப்படும் இம்மாதம் 25 ம் தேதிக்குள் இரண்டு மாத வேத அறிவுப் போட்டியின் விடைகள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும்.

---

## ஆசிரியர் கடிதம்

4-11-96

வாசகர்களுக்கு,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள். நமது ''கிறிஸ்துவின் வசனம்'' இதழை ஒழுங்குபடுத்தும்பணி நடைபெற்று வருகிறது ஆகையால் தாங்களுடைய நிரந்தர முகவரியை பின்கோடு உடன் ஆங்கிலத்தில் இன்றே ஒரு அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள். நீங்கள் தொடர்ந்து இவ்விதழை பெற்றுவருபவராக இருக்கலாம் பரவாயில்லை மறவாமல் முகவரியை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். புதிதாக இதழைபடிக்க வாஞ்சிக்கிறவர்களுக்கும் அனுப்பப்படும். முகவரியை எமது அலுவலகத்தில் பதிவு செய்கிறவர்களுக்கு மட்டும் (ஒரு வருடத்தில் பரிசுத்தவேதாகமத்தை ஒருமுறை வாசித்து முடிக்க அட்டவணை ஒன்று இலவசமாக அனுப்பிவைக்கப்படும்) கர்த்தருக்கு சித்தமானால் நவம்பர் 25 ம் தேதிக்குள் பதிவு செய்தவர்களுடைய பெயர்பட்டியல் டிசம்பர்மாத இதழில் வெளியிடப்படும். இவர்களுக்கு 1997 டிசம்பர் வரை தொடர்ந்து மாத இதழ் அனுப்பி வைப்போம்.

இவ்விதழுக்காக ஜெபியுங்கள். படித்துவிட்டு உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்து உதவுங்கள் இந்தியாவில் எப்பகுதியில் இருந்தாலும் தமிழ் படிப்பவர்களுக்கு இவ்விதழை அனுப்பிதர முடியும் (நீங்கள் கிறிஸ்துவின்சபையை சார்ந்தவராக இருந்தால் உங்கள் செய்திகளை கொடுங்கள் இலவசமாக பிரசுரிக்கிறோம் உங்களுடைய செய்தி10 வரிக்குள் இருக்கட்டும்) நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். எங்களுடைய நோக்கம் கிறிஸ்துவின் வசன இதழை படித்து தாங்கள் ஆவிக்குறிய வளர்ச்சியடைந்து தேவனை அறிகிற அறிவில் பெறுக வேண்டும், கர்த்தர்கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

ஆசிரியர்

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 நவம்பர் 1996 கனி 4


## வஞ்சிக்கப்படாதிருங்கள்
## BE NOT DECEIVED

தேவன் சர்வவல்லமையுள்ளவர், சர்வவியாபி, சர்வவிற்பனர், சகலத்தையும் கட்டுப்படுத்துகிறார், அவர் அன்பானவர், தயை உள்ளவர், கிருபையுள்ளவர்.

சிலர் கேட்கின்றனர். தேவன் சர்வவல்லமையுள்ளவர் என்பது உண்மையானால், எல்லாவற்றையும் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி படைத்தவரானால், இன்னும் ஏன் தீமையை விட்டு வைத்திருக்கிறார்? சாத்தானை அழிக்க அவருக்கு சக்தி இல்லையா? நன்மைக்கு எதிராக தீமை செயல் படுவது ஏன்? தேவன் பிரிந்திருக்கிறாரா? தீமையை உலகத்திலிருந்து எடுத்துப் போட தேவனுக்கு வல்லமை இல்லையா? என்றெல்லாம் கேட்கின்றனர்,

இந்த கேள்விகளை கேட்பவர்கள் மனதில் கொள்ள வேண்டிய ஒரு காரியம் என்னவெனில் பரலோகத்தில் ஒரு தேவன் இருப்பதைப் போல் நரகத்தில் ஒரு சாத்தான் இருக்கிறான் என்று வேதாகமம் திட்ட வட்டமாகக் கூறுகிறது நன்மைக்கு அணிகலனாக எப்படி தேவன் இருக்கிறாரோ, அப்படியே தீமையே உருக் கொண்டவனாக சாத்தான் இருக்கிறான்,

சிலர் இதை நம்ப மறுக்கிறார்கள், ''தீமை'' பாவம் என்பதெல்லாம் மனிதனுடைய தவறான எண்ணம் என்கிறார்கள். இந்தத் தீமைக்கு காரணவாதி சாத்தான் என்பதையும் மறுக்கிறார்கள், ஆனால் தேவன் உண்டு என்று கூறும் அதே வேதாகமம் தான் பிசாசானவனைப் பற்றியும் கூறுகிறது. ஒன்றை நம்பினால், அடுத்ததையும் நம்ப வேண்டும். யோபு கதையில், தேவன் சாத்தானைப் பார்த்து நீ எங்கே இருந்து வருகிறாய் என்பதற்கு அவன், பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித் திரிந்து வருகிறேன் என்றான். இந்த வாசகத்திலிருந்து, சாத்தான் உலாவுகிறான், பேசுகிறான் என்று அறிகிறோம். பேதுரு கூறுகிறார். ''உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோவென்று வகை தேடித் திரிகிறான்'' (1 பேது. 5:8.) இவன் தான் ஏவாளை, ஏதேன் தோட்டத்தில் வஞ்சித்தான். பொய்யான அற்புதங்களோடும், சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் மக்களை வஞ்சிக்கிறவன் (2 தெச.2:9-10) கிறிஸ்துவும், மூன்று முறை சாத்தானால் சோதிக்கப்பட்டார், 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் என்று 2 கொரி. 4:4-ல் அழைக்கப்படுகிறான்.

அவன் அந்தகார லோகாதிபதி இருளின் மீது அதிகாரம் உள்ளவன்
பிசாசுகளின் தலைவனாக, ராஜாவாக தன் ராஜ்யத்தை ஆளுகிறான். இந்த
பிசாசுகள் இவனுடைய தூதர்கள். கிறிஸ்துவும் சாத்தானை, பொய்யனும்
கொலைபாதகனும், பொய்க்குப் பிதா என்று கூறுகிறார். (யோ. 8:44)

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்
என்றார் இயேசு. பாவம் செய்கிற ஒவ்வொருவனுக்கும், சாத்தான் பிதாவாக
ராஜாவாக இருக்கிறான். பாவம் செய்கிறவர்கள் அவன் ஆதிக்கத்தில்
இருக்கிறார்கள். பவுலும் மாயவித்தைக்காரனை எலிமாவை பிசாசின் மகன்
என்றார், (அப். 13 : 10). அநீதியாய் ஜீவிக்கிறவன் பிசாசின் பிள்ளை என்று
யோவான் கூறுகிறார். (1 யோ. 3:10).

2 கொரி. 4:4-ல், இப்பிரபஞ்சத்தின் தேவன் என்கிறார். அதன் பொருள்
என்ன? அப்படி என்றால் சாத்தான், சரீர பிரகாரமான இவ்வுலகத்தை
சிருஷ்டித்தவனா? இல்லை. தேவனே சகலத்தையும் சிருஷ்டித்தார் (1 :
கிறிஸ்துவைப் பற்றி கூறும் பொழுது பவுல் கூறுகிறார். ஏனென்றால்
சகலமும் அவருக்குள் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும்
பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவை
களுமான சகல வஸ்துகளும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்க
ளானாலும் துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும்
அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும்
கர்த்தருடையது (சங். 24 : 1). தேவன் தம்முடைய இயற்கை நியதிக
ளினால் உலகை இயக்கி வருகிறார்.

இந்த ரீதியில் சாத்தான் இப்பிரபஞ்சத்தின் தேவனல்ல. உலகத்திலுள்ள
அரசுகளின் மீது அதிகாரம் படைத்தவன் என்ற ரீதியிலும் இப்பிரபஞ்சத்தின்
தேவனாக இருக்க முடியாது. உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில்
ஆளுகை செய்து நமக்கு சித்தமானவனை அதின் மேல் அதிகாரியாக்குகிறார்
(தானி. 5:21)

தேவனாலேயன்றி ஒரு அதிகாரமும் இல்லை. உண்டாயிருக்கிற அதி-
காரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது (ரோ. 13:1) எல்லா துரை
தனத்துக்கும், அதிகாரத்துக்கும் மேல் உயர்ந்திருக்கிறார் கிறிஸ்து (எபே 1:20)

சாத்தான், சிருஷ்டிகர்த்தா என்ற முறையிலோ, இவ்வுலகத்தை
போஷிக்கிறவன், ஆளுகை செய்கிறவன் என்ற ரீதியிலோ, அல்லது ராஜ்யங்
களின் மீது அதிகாரமுள்ளவன் என்ற அடிப்படையிலோ, இப்பிரபஞ்சத்தின்
தேவனாக இருக்க முடியாது என்ற கண்ணோட்டம். பின்பு எந்த அடிப்படை
யில் இப்பிரபஞ்சத்தின் தேவனாவன் என்று பார்க்கலாம். சாத்தான் முன்பாக
சரீர பிரகாரமாக தலை பணிந்து அவன் அதிகாரத்தை ஏற்று கொள்கிறவர்களை

நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவனை தேவனாக ஏற்றுக்கொண்டவர்களை சந்தித்து இருக்கிறீர்களா? அப்படி அல்லவென்று வார்த்தையினால் மறுதலிக்கிறீர்கள்! ஆனால் கிரியைகளிலோ சாத்தான் தலைமையை ஏற்றுக் கொண்டு அவன் அதிகாரத்தை அங்கீகரிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

பாவத்தை காட்டி, அநித்திய சந்தோஷத்தை கொடுத்து, சாத்தான் மக்களை வஞ்சிக்கிறான். ஆம் சாத்தான் வஞ்சனையால் மக்களை ஆளுகிறான். தேவன் நமக்காக படைத்த நன்மையான காரியங்களை துஷ்பிரயோகம் செய்யும்படி ஏமாற்றுகிறான், எல்லாவற்றையும் மனிதனுடைய நலனுக்காக தேவன் கொடுத்திருக்கிறார். ஆனால் அவைகள் கட்டுப்பாட்டுடன் அனுபவிக்கப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இங்குதான் சாத்தான் நம்மை வஞ்சிக்கிறான். எந்த நல்ல நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதை சுயநலத்திற்காக, மாம்ச இச்சை நிறைவேற்றுவதற்காக அனுபவிக்க நம்மை வஞ்சிக்கிறான்.

உதாரணமாக, தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கினார். விவாகம் என்ற கூட்டுக்குள் ஆண், பெண் உறவு முறை, கனமுள்ள காரியம் (எபி. 13:4). அதை அனுபவிப்பது தவறல்ல. விவாகம் என்ற கூட்டுக்கு வெளியே, திருமணத்திற்கு முன்பு ஆண் பெண் இருபாலர் கூடி உறவு அனுபவிப்பது பாவம். விவாகம் என்ற கூட்டுக்குள்ளும், தேவனுடைய திட்டத்தின்படி, ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் செயல்படாமல், விவாக மஞ்சத்தை அசுத்தப்படுத்தினால் அது பாவம்.

தேவனுடைய உண்மையான நோக்கத்தை தள்ளி காதல், களியாட்டம் நடனம், என்ற பெயரில் விபசாரம், வேசித்தனம், காமவிகாரம் போன்ற காரியத்தில் ஈடுபட சாத்தான் மக்களை வஞ்சிக்கிறான். அவன் வஞ்சனைக்கு பலியானோர் ஏராளம். இப்படித்தான் அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். எப்படியும், எதையும் அனுபவிக்கலாம் என்பது சாத்தானின் போதனை. எண்ணிலடங்கா வாலிப சகோதர சகோதரிகள் இந்த வஞ்சனைக்கு ஒப்புக் கொடுத்து அதன் பிரதிபலனாக அவமான படுகுழியில் விழுந்து கிடக்கின்றனர்.

கிறிஸ்துவை ஏற்றுக் கெண்ட பிள்ளைதான், இந்த சாத்தானின் பித்தலாட்டத்திலிருந்து தன்னை தப்புவித்துக் கொள்ள முடியும். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்க வேண்டும்.

பி. ஆர். சாமி
பெங்களூர்

★ **சபை செய்தி:**

அக். 17ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின்

சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. அநேக சகோதரிகள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்து தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தினார்கள்.

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடன் கடைசி ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து எழுதி இம்மாதம் 25-ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்கவும்.

1 சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும் தண்ணீர் செம்பையும் எடுத்துக் கொண்டவன் யார்?

2 துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் எதிலே தள்ளப்படுவார்கள்?

3 நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே எதைப்போல பிரகாசிப்பார்கள்?

4 நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் யாருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்?

5 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் என்ன செய்யப்படுவார்கள்?

6 எப்படியுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்?

7 சவுல் தாவீதுக்குப்பயந்து தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்கு என்னவாயிருந்தான்?

8 மாம்ச இச்சைகள் எதற்கு விரோதமாய் போர்செய்கிறது?

9 மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக இருப்பவர் யார்?

10 யார், யாருக்கு, சம்பளத்தைப் பத்துமுறை மாற்றி வஞ்சித்தான்?

''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்,

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத்தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.''

சங்கீதம் 1:2-3

★ ★ ★

# இயேசுவின் பிறப்பு

## Birth of Jesus

உலகிற்கு ஓர் நற்செய்தி பாவத்தில் மூழ்கியிருக்கும் மக்களை விடுதலை செய்ய வந்தவர். உலகத் தோற்றமுதல் இம்மட்டும் இனிமேலும் இருக்கும் உலகத்திற்கு ஒரு நாயகராக கி.மு, கிபி, என்ற வரலாற்று பூர்வமாக வந்தவர் ''இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்

நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' என்று தேவதூதனால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது அன்று. ஆம்! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் செய்தி இயேசுவின் பிறப்பாகும்.

இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று என்று பரிசுத்த வேதாகமத்தில் யோவான் எழுதின சுவிசேஷத்தில் முதலாம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். ஆதியிலே இருந்த ஆண்டவர் உலகத்தை இரட்சிக்க கன்னியாகிய மரியாளிடத்தில் உற்பத்தியாகிமனிதனை இவ்வுலகத்திலிருந்து மீட்டு பரலோக ராஜியத்திற்கு அழைத்து செல்ல மனித உருவாகவந்தார். அநேகர் சொல்வது, எத்தனையோ மகான்கள் பிறந்தார்கள் நல்ல ஊழியம் செய்து மரித்து விட்டார்கள் அவர்களுடைய பெயர் இன்றும் இருக்கிறது, அதேபோல் இயேசுவும் ஒரு மகான் என்று சொல்லுகிறார்கள் அப்படியல்லவென்று உங்களுக்கு சொல்லுகிறேன், எல்லா மகான்களும் மரித்துவிட்டார்கள். ஆனால்! இயேசு மரிக்கவில்லை மூன்றாம் நாள்உயிர்த்தெழுந்தார்.இது உலகறிந்த உண்மையாக இருக்கிறது.இன்றும் ஜீவிக்கிறார்.

இயேசுவின் பிறப்பிற்கு முன்பே தீர்க்கதரிசிகள் நம்முடைய பிதாக்களின் காலத்தில் தீர்க்கதரிசனமாக இயேசுவின் பிறப்பை முன்னறிவித்திருக்கிறார்கள். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்,நமக்குஒருகுமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ளதேவன், நித்தியபிதா சமாதானப்பிரபு எனப்படும்'' என்று ஏசா 9:6ல் வாசிக்கின்றோம். ஆம்!பிரிய நண்பரே அவர் நாமம் அதிசயமானவர். ''யோசேப்புக்கு கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு... அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றார்'' மத் 1:20,21.

உலகம் உண்டானது முதல் யாரும் செய்ய முடியாத காரியத்தை செய்தார் தேவனால் அனுப்பபட்டவர்! அதிசயமானவர்! என்பதை நிருபித்தார் பிறவிகுருடனின் கண்களை திறந்தார், சப்பாணிகளை நடக்கசெய்தார், குஷ்டரோகிகளை சுத்தமாக்கினார், செவிடர் கேட்டனர், மரித்தோர் எழுப்பப்பட்டனர், தண்ணீர் மீது நடந்தார் தண்ணீரை திராச்சரசமாக மாற்றினார், 5 அப்பம் 2 மீன்களை 5000 பேருக்கு பங்கிட்டார் இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்களை செய்தார். ஆகையால் அவர் நாமம் அதிசயமானவர்.

ஆலோசனை கர்த்தர் ஆம்! அவர் தம்முடைய சீஷர்களுக்கு வலையைமாற்றி போட்டு மீன்பிடிக்க ஆலோசனை கொடுத்தார் அப்படியே போட்டு வலை கிழிந்துபோகத்தக்கதாக அதிகமான மீன்களை பிடித்தார்கள் சிலர் வந்து இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ? என்று கேட்டார்கள் அதற்கு அவர் இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். இப்படியே அநேக ஆலோசனைகளையும் அவர் கொடுத்த கட்டளைகளையும் நாம் வேதாகமத்தில் பார்க்கலாம்

வல்லமையுள்ள தேவன், ஆம்! அவர் சர்வவல்லவர். காற்றையும் கடலையும் அதட்டி இரையாதே அமைதலாயிரு என்றார் அது அப்படியே ஆயிற்று. நாம் பார்க்கிற எல்லாம் தேவனால் வல்லமையாக உண்டாக்கப் பட்டது, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் நித்திய பிதா என்றென்றும் உள்ளவர். அவருக்கு துவக்கமோ, முடிவோ இல்லை. ஆதியும் அந்தமுமாயிருக்கிறார், என்று வெளி. 1 : 8 ல் வாசிக்கின்றோம். அவர் சமாதானப்பிரபு என்று பார்க்கிறோம், ''எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இரு திறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்'' என்று எபே. 2:14-16 ல் வாசிக்கின்றோம்.

பிரிய நண்பரே! இயேசுவின் பிறப்பு நமக்கு ஒரு சந்தோசமான செய்தியே. யோவான் 17 : 3 ல் '' ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்''. ஒரு மனிதன் இப்பூமியில் ஆண்டவராகிய இயேசுவையும், அவருடைய உபதேச சட்டங்களையும் தெரிந்து கொள்வதுதான் நிலையான ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. இதுவே ''நித்திய ஜீவன்'' என்று பார்க்கிறோம். இந்த நித்திய ஜீவனை பெற இயேசுவின் பிறப்பை குறித்து மேலும் பரிசுத்த வேதாகமத்தில் வாசித்து தெரிந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கு ஞானத்தை தந்தருளுவாராக. ஆமென்.

## பெண்கள் பகுதி: ★ ★ ★

### சீரியாவுக்கு இரட்சிப்பு
### Deliverance unto Syria

அன்பான சகோதரிகளே! சீரியாவுக்கு இரட்சிப்பு எப்படி வந்தது? இரட்சிப்பு கர்த்தருடையதல்லவா! ஆம், கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார் IIஇராஜா 5:1 கர்த்தரை தெய்வமாகக் கொண்டிராத இந்த

தேசத்திற்கு இரட்சிப்பின் நற்செய்தி யார் மூலம் கொண்டு செல்லப்பட்டது தன்னை போன்ற ஒரு பெண்ணின் மூலம் தான் இரட்சிப்பின் வாசல் திறக்கப்பட்டது. ஆம் சகோதரிகளே! இஸ்ரவேல் தேசத்திலிருந்து சீரியாவுக்கு சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்ட இந்த சிறு பெண் சீரியாவின் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் அவள் தன் நாச்சியாரைப் பார்த்து, என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும் அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள் II இரா 5:2-3 எவ்வளவு துணிச்சலாக தன் அடிமை நிலைத்தை மறந்து, சீரிய ராஜாவின் படைத்தலைவனும், பெரிய மனுஷனும் கனம்பொருந்தியவனுமாயிருந்த நாகமானை கர்த்தருடைய தீர்க்கதரிசியினிடத்திற்குப் போகும்படி ஆலோசனை கூறியிருக்கிறாள். ஆம்! அன்று இந்த சிறு பெண் பயந்து நாகமானை தீர்க்கதரிசியினிடத்திற்கு வழிநடத்தாதிருந்திருந்தால் சீரியாவுக்கு விடுதலை வந்திருக்காதே. இவள் தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றுமட்டுமே கூறினாள். இவளது இந்த சிறிய ஊழியம் சீரியா முழுவதிற்கும் இரட்சிப்பைக் கொண்டு வந்தது.

நாகமான் மகா பராக்கிரமசாலியாக இருந்தான் II இரா 5:1 இருந்த போதிலும் தனக்கு சுகம் வேண்டுமே! இந்த அந்தஸ்து கனெல்லாம் சுகம் கொடுக்காதே. சிறுபெண்ணின் கூற்றை கேள்விபட்டு சமாரியாவிலுள்ள எலிசாவின் வாசற்படியிலே தன் குதிரைகளோடும், தன் இரதங்களோடும் வந்து நின்றான். அப்பொழுது எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாமிசம் மாறி நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு, புறப்பட்டு போய்; அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத்தடவி இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன் நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிற தற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிர கோபத்தோடே திரும்பிப் போனான் II இரா 5:9-12.

கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசா ஸ்நானம் பண்ணு என்று மட்டுமே கூறினான். அதற்குக் கீழ்படிய இந்த நாகமானுக்கோ மனமில்லை தான் நினைத்தபடி சுகம் வேண்டும், தான் நினைத்தபடி ஆசீர்வாதம் வேண்டும் என்று தான் நினைத்தான், இன்றும் கூட அநேகர் இப்படித்தான் ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் சென்றுவிட்டால் போதும், ஊழியர்கள் தன் தலையில் கைவைத்து ஜெபித்துவிட்டால் போதும், எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கிறார்கள். இயேசுவே நம் பரிகாரி. கர்த்தருடைய உபதேச

சட்டங்களுக்குக் கீழ்படியும் பொழுது மட்டுமே இவ்வித ஆசீர்வாதங்களைப்
பெற முடியும்.

அதுமட்டுமல்ல! இந்த நாகமான் தன்னைக்குறித்தும் தன் தேசத்து
நதிகளைக் குறித்தும் பெருமை கொண்டவனாய், இஸ்ரவேலின் தண்ணீர்கள்
எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகள் நல்லதல்லவோ என்று
கூறுகிறான். இவனைப் போல சிலர் என் இனம், என் ஜனம், என் குலம்,
என் குடும்பம், என் சபை முதலானவைகள் நல்லதல்லவோ என்று பெருமை
யடித்துக் கொண்டிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து
நிற்கிறார். கர்த்தருடைய சத்தத்திற்கும், வேதவாக்கியங்களின்படி போதிக்
கிற ஊழியர்களின் போதனைக்கும் ஆலோசனைக்கும் செவிசாய்க்க விரும்
புவதில்லை, ஒருவேளை ஒரு ஜோசியனோ, குறிசொல்லுபவனோ
ஒன்று சொல்வானேயானால் எந்த சாங்கியமும், பரிகாரமும் செய்ய
தயங்கவே மாட்டார்கள். அன்பு சகோதரிகளே! இது கர்த்தருக்கு அருவருப்
பானது. உபா. 18:11-12. இனிமேலாவது நம்மை தாழ்த்தி கர்த்தருடைய
சத்தத்திற்குக் கீழ்படிவோம்.

பாருங்கள்! உக்கிர கோபத்தோடே திரும்பிப் போன நாகமான் இப்-
பொழுதோ கீழ்படிய தன்னை ஒப்புக் கொடுக்கிறான். அவனுடைய
ஊழியக்காரர்கள் சமீபத்தில் வந்து அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரி
யத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?
ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே
சொல்லும் போது அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று
சொன்னார்கள், அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன்
வார்த்தைபடியே யோர்தானில் ஏழுதரம் முழுகின போது அவன் மாம்சம்
ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்.
எப்பொழுது சுத்தமானான்? தேவனுடைய வார்த்தையின்படி செய்த பொழுது
சுத்தமானான். ஆம் சகோதரிகளே! கர்த்தருடைய வார்த்தையின் படி செய்-
வோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும்
நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று I யோ 1:7 ல் பார்க்கிறோம் அந்த-
படியே கிறிஸ்துவின் இரத்தம் நம்மை கழுவும்படி அவரிடம் நம்மை
நாகமானைப் போல ஒப்படைப்போம்.

அதுமட்டுமல்ல! நாகமான் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய
மனுஷனிடத்துத் திரும்பி வந்து அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ர-
வேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை
என்பதை அறிந்தேன்... என்றான் II இரா 5:15. எப்பேர்பட்ட அருமையான
அறிக்கை இது இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே
தேவன் இல்லை என்றான். ஆம்! வானத்திற்கும், பூமிக்கும் இவரே தேவன்.
கர்த்தர் ஒருவரே தேவன்.

இதைப்போலவே சாதராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் பக்திவைராக்கியம் நேபுகாத்நேச்சார் ராஜாவை, இவ்விதமாய் இரட்சிக்கத் தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றும் தானி. 3:29, தானியேலின் பக்தி வைராக்கியம் தரியுராஜாவை, அவர் ஜீவனுள்ள தவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர் என்றும் அறிக்கையிடச் செய்தது. நன்மைகள் பல பெற்ற நாமும் இவ்விதமாய் கர்த்தர் ஒருவரே தேவன் என்று புறஜாதிகள் மத்தியில் தைரியமாய் அறிக்கையிடுவோம் அறிக்கையிட்டதுமல்லாமல் இந்த நாகமான், உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை என்று உறுதி கூறுகிறான் II இரா. 5:17.

இவ்விதமாக இந்த நாகமானைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார் II இரா 5:1. அடிமையாகக் கொண்டு போகபட்ட சிறு பெண்ணின் சிறிய ஊழியம் சீரியாவுக்கு பெரிய விடுதலையைக் கொண்டு வந்தது. அன்பான சகோதரிகளே! நாம் நமது சூழ்நிலை, நமது இயலாமை, நமது தாழ்ந்த நிலை போன்ற இவைகளையே எண்ணிக் கொண்டிராமல் நமக்கிருக்கிற பெலத்தோடே அநேகரை இயேசுவண்டை வழிநடத்த பிரயாசப்படுவோம் நம்மைக்கொண்டு கர்த்தர் பெரியகாரியங்களை செய்வாராக!

Glory Arjunan Batlagundu.

---

## சத்திய வழி ரேடியோ நிகழ்ச்சி

### நடத்தும்

### இலவச வேதபாடத்திட்டம்

வேதாகமத்தை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்ட முப்பது பாடங்களைக் கொண்ட வேத பாடம் உங்கள் இல்லங்களைத் தேடிவர ஆயத்தமாயிருக்கிறது இன்றே இதில் சேர்ந்து படிக்க ஒரு கடிதமுலம் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு படித்து பயன் பெறுக!

SATHYA VAZHI
Bible Correspondence School
Post Box - 8405,
Bangalore - 560 084
INDIA.

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No. 84661-92
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**

WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.
Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti RoadBTL